**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்**.130/2019

பெயர்-திரு.பொன்னுசாமி நாள்.22.07.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு, தாவா சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என ஆவணங்களை பார்த்தேனா என்றால், என்னுடைய சொத்துதான். தாவா சொத்து என்னுடையது என காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், தாவா சொத்திலிருந்து பிரதிவாதி காலி செய்யுமாறு இடையூறு செய்தார், அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 8 பிரதிவாதிகள் வரதனின் இரண்டாவது மனையின் மக்கள் என்றால், சரிதான். நான் வரதனின் முதல் மனைவி சின்னமணியின் மகன் என்றால், சரிதான். நான் நிரூபண பிரமாணப் பத்திரிக்கையில், எனது தந்தை வரதனுக்கு தாவா சொத்து பட்டா வழியில் பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அந்த பட்டாவை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தின் காலை எண்.308. தாவா சொத்தின் எவ்வளவு விஸ்தீரணம் 3 செண்ட். தாவா சொத்தின் செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால், தெற்குப்பக்கம் தர்மன் வீடும், வடக்குப் பக்கம் பூசாரி வீடும், கிழக்குப் பக்கம் தர்மன் வீடும், மேற்குப் பக்கம் இருப்பவர் பெயர் தெரியவில்லை.

2. பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு, தாவா சொத்திற்கான வீட்டு வரி ரசீது, குடியிருந்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் விவசாயத்துறையில் இரவு காவலாளியாக பணியாற்றி வந்தேன். எனக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளார்கள். எனது மகன் டாஸ்மார்க் கடையில் வேலை செய்கிறார். எனது மகளுக்கு திருமணமாகி, அல்லப்பம்பாளையத்தில் குடியிருந்து வருகிறார். 2006-ல் இரவு காவலாளியாக பணியாற்றி ஓய்வு பெற்று, அரசாங்கம் ரூ.2,00,000/-ம் கொடுத்ததை காட்டும் வகையில் வங்கி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. சிறுவயது முதல் தாவா சொத்தில் குடியிருந்ததற்கும், தாவா சொத்தின்

மேற்கூரையை சரிசெய்ய செலவு செய்ததை காட்டும் வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், 1-ம் பிரதிவாதிதான் குடியிருக்கிறார் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து வகையில், வரதனின் இளைய மனைவி பொன்னி என்பவருக்கு பட்டா வகையில் பாத்தியப்பட்டது, என்றால் சரியல்ல. வரதனுக்கும், தாவா சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால், சரியல்ல. பொன்னியின் வாரிசுகள் 1-ம் பிரதிவாதி வரதனுக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்ட விவரம் எனக்கு தெரியாது. எனது அப்பா 1992-ல் காலமாகிவிட்டார். எனது சகோதரி சின்னமணி உடல் நலக்குறைவால் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால், சரிதான். எனது சகோதரி சின்னமணியை நான்தான் பாதுகாத்து வந்தேன் என்றால், சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் சின்னமணியின் கைரேகை இரண்டாவதாக உள்ளது. வழக்குரையில் உள்ள சின்னமணியின் கைரேகையை எனது வீட்டில் வைத்து வாங்கினேன். எனது மகன் ராஜேஸ்குமார் புதியதாக வீடு கட்டியுள்ளார் என்றால், சரிதான். அந்த வீடு தாவா சொத்திலிருந்து 200 அடி தூரத்தில் உள்ளது என்றால், சரிதான். அந்த வீடு கட்டும்போது அந்த வீட்டிற்கான சிமெண்ட், கம்பிகளை தாவா சொத்தில் போட்டு வைத்துள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்திலிருந்த சிமெண்ட், ஜல்லிகளை 1-ம் பிரதிவாதி ராஜேஸ்குமாரிடம் எடுக்க சொன்னதால், அவர்களுக்குள் முன் விரோதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன் காரணமாக என்னை தூண்டி விட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் நான் ஒருபோதும் குடியிருக்கவில்லை என்றாலும், சரியல்ல.

4. தாவா சொத்துக்களைப் பொறுத்த வகையில், பொன்னிக்கு பாத்தியப்பட்டது என எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு பட்டா செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால், இல்லை. வழக்குரையில் 27.05.2019-ம் தேதியன்று நான் வெளியே சென்றபோது, எனது மனைவி மகளிடம் 1-ம் பிரதிவாதி தகராறு செய்ததாக பிராதில் கூறியுள்ளேனா என்றால், ஆமாம். காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால், அன்றைய தினமே புகார் கொடுத்தேன். அதன் பிறகு 17.06.2019-ல் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை. அவ்வாறு பின்னிட்டு புகார் கொடுத்ததாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானது என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை

என்றாலும், நான் எனது மகனுடன் குடியிருந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. 1-ம் பிரதிவாதி மீதான முன் விரோதம் காரணமாக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.07.22 15:57:48 +0530

District Munsif